**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

**O.S. NO. 123/2024**

**வா.சா.2**

**திருமதி. மகேஸ்வரி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)**

நான் நாகதேவன்பாளையத்தில் குடியிருக்கிறேன். வீட்டில் இருந்து வருகிறேன். என் கணவர் இரயில்வேயில் வேலை செய்து வருகிறார். வழக்கு சொத்திற்கும், நான் குடியிருக்கும் வீட்டிற்கும் 30 கி.மீ தூரம் இருக்குமா என்றால் 25 கி.மீ தூரமிருக்கும். என் கணவர் கடன் கொடுப்பது சம்பந்தமாகவும், சொத்து வாங்குவது சம்பந்தமாகவும் என்னிடம் ஆலோசிப்பார் என்றால் ஆமாம். 17-06-2021 தேதியிட்ட ஒப்பந்தம் சம்பந்தமாகவும் என்னிடம் பேசினார் என்றால் ஆமாம். சொத்து சம்பந்தமாக கிரி (எ) வெள்ளியங்கிரி தகவல் சொன்னதாக என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். மேற்படி வெள்ளியங்கிரி என்பவர் குடும்ப நண்பர் என்றால் சரிதான். மேற்படி நபர் எங்கள் குடும்ப நண்பர் என்பதால் என் கணவர் அவர் மூலமாக கடன் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார் என்றால் இல்லை. 17-06-2021 தேதியிட்ட கிரைய ஒப்பந்தமானது சொத்தினை கிரயம் பெறுவதற்காக போடப்பட்ட ஒப்பந்தமல்ல கடன் தொகைக்கு பொறுப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு

ஆவணம் என்றால் சரியல்ல. ஒப்பந்த தேதியில் பிரதிவாதியை நான் பார்த்தேனா என்றால் ஆமாம். அதற்கு முன்பாக நான் அவரை பார்த்ததில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் பிரதிவாதியை அவரது வீட்டில் வைத்து பார்த்தேன் என்றால் ஒப்பந்த தேதிக்கு 1 வாரத்திற்கு முன்பாக பார்த்தேன். ஒப்பந்தம் சம்பந்தமாக நடந்த நடவடிக்கைகள் அனைத்தும் கிரி (எ) வெள்ளியங்கிரியை விசாரித்தால் தெரியும் என்றால் ஆமாம். நானும், என் கணவரும் கிரையம் செய்துகொள்வதற்காக ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்பதால் தான் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள காலக்கெடு முடிவடைந்து 3 மாதங்கள் கழித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தமானது கடனுக்காக ஏற்படுத்தப்பட்டது என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.